**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2021ம் வருடம் டிசம்பர் திங்கள் 09ம் நாள் வியாழக்கிழமை
**அ.வ.எண்.294/2020 இல் இ.ம.எண்.1/2020**

ஆனைமலை தாலூக்கா, ஒடையகுளம் கிராமம், குப்புச்சி புதுார், என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.தங்கவேல் மகன் சுமார் 43 வயதுள்ள திரு.T.சரவணபிரகாஷ்.

... மனுதாரர் / வாதி

/ எதிர் /

ஆனைமலை தாலூக்கா, ஆனைமலை கிராமம், சந்தை தெற்கு வீதி, TELC சர்ச் வளாகம், கதவு எண்.6, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.சாலமன் மகள் சுமார் 27 வயதுள்ள லிடியா பிரமிளா வின்சி.

... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

தாவா 3வது அயிட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்காலை அமைதியான முறையில் மனுதாரர் / வாதி உபயோகித்து அவரது 1வது அயிட்ட பூமிகளுக்கு பாசனம் செய்து வருவதை 4ம் பிரதிவாதியோ அவரது ஆட்கள் வகையறா பேர்களோ எவ்வித இடைஞ்சலும் ஏற்படுத்தக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 01.10.2020

இம்மனுவானது கடந்த 16.11.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்

/ 4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.Ra.அய்யப்பன் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் / வாதி மற்றும் எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

## இறுதி உத்தரவு

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் / வாதி தாவா 3வது அயிட்ட ஒற்றைக்கல் அரணி வாய்க்காலை அமைதியான முறையில் உபயோகித்து 1வது அயிட்ட பூமிகளுக்கு பாசனம் செய்து வருவதை 4ம் பிரதிவாதியோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று இவ்வழக்கு முடிவடையும் வரையில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

## சொத்து விபரம்

**1வது அயிட்டம் :**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை சார்பதிவு மாவட்டம், முன்பு பொள்ளாச்சி வட்டம் தற்போது ஆனைமலை வட்டம், ஒடையகுளம் கிராமம் புலத்தில், பட்டா எண்.1286க்கு கட்டுப்பட்ட க.ச.505/D நெ காலை பு.ஹெக்.3.93.5 க்கு பு.ஏ.9.72 க்கு தீரூ.10.90 பை மேற்படி பூமி முழுவதும் இதற்கு செக்குபந்தி,

கிழமேல் பெரியபோது தடத்துக்கும்
க.ச.505/C1&C2 க.ச.501/A1 நெ காலைகளுக்கும் ... வடக்கு

க.ச. 505/C1&C2 க.ச.505/B நெ காலைகளுக்கும் ... கிழக்கு

க.ச.503, க.ச.501/B1 நெ காலைகளுக்கும் ... மேற்கு

க.ச.504 நெ காலைக்கும் ... தெற்கு

இதன் மத்தியில் மேற்படி பு.ஹெக்.3.93.5 க்கு பு.ஏ.9.72 க்கு தீர்வை ரூ.10.90 பை.

பின்னும் மேற்படி கிராமம் புலத்தில், பட்டா எண்.348 க்கு கட்டுப்பட்ட க.ச.501/B1 நெ காலை பு.ஹெக்.1.71.0 க்கு பு.ஏ.4.23 க்கு தீர்வை ரூ.4.74 கை மேற்படி பூமி முழுவதும் இதற்கு செக்குபந்தி,

க.ச.501/B2 நெ காலைக்கும் .... வடக்கு

க.ச.501/A1, க.ச.501/A2, க.ச.505/D நெ காலைகளுக்கும் ... கிழக்கு

A.K.குமாசாமிக் கவுண்டர் வகையறாவுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கும் .... மேற்கு

க.ச.503 நெ காலைக்கும் .... தெற்கு

இதன் மத்தியில் மேற்படி பு.ஹெக்.1.71.0 க்கு பு.ஏ.4.23 க்கு தீர்வை ரூ.4.74 பை மேற்படி பூமிகளுக்கு 17.09.1964 ம் தேதிய கிரையப்பத்திரத்தில் கண்ட "இதில் கண்ட க.ச.501B நெ காலை வழியாக நீங்கள் தெற்கே இருந்து அரணி பிடித்து PAP வாய்க்கால் தண்ணீரை வடக்கே உள்ள உங்கள் பூமிகளுக்கு தண்ணீர் பாய்த்துக்கொள்ள வேண்டியது" என்ற பாத்தியம் உட்பட.

மேற்படி பூமி தற்போதைய உட்பிரிவின் படி பட்டா எண்.2379 ன் படி க.ச.501/B1 நெ பாலை பு.ஹெக்.1.71.00 க்கு தீ.ரூ.4.74, க.ச.505/D நெ காலை பு.ஹெக்.3.93.50 க்கு தீ.ரூ.10.90-க்கு கட்டுப்பட்டது.

<u>2 வது அயிட்டம் :</u>

ஆனைமலை சார்பதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், ஒடையகுளம் கிராமம் புலத்தில் க.ச.501B நெ காலை பு.ஏ.12.49 ல் க.ச.505D நெ காலைக்கும், நாளது தேதியில் நான் கிரையம் செய்யும் மைனர் தங்கவேல் கார்டியன் தகப்பன் பழனியப்ப கவுண்டர் பங்கு பூமிக்கும் தெற்கு, என் பங்குக்கும் (சண்முகம்) மேற்கு, க.ச.500 நெ வண்டிப்பாதை புறம்போக்குக்கும் வடக்கு, க.ச.501A நெ காலைக்கும் கிழக்கு இதன் மத்தியில் பு.ஏ.1.00 க்கு தீ.ரூ.1.12.

மேற்படி பூமி தற்போதைய உட்பிரிவின் படி பட்டா எண்.2739ன் படி க.ச.501/B2A1 நெ பாலை பு.ஹெக்.0.40.50க்கு தீ.ரூ.1.12க்கு கட்டுப்பட்டது.

மேற்படி பூமிகளும் 17.09.1964ம் தேதிய கிரைய ஆவணத்தில் " நாளது தேதியில் நான் கிரையம் செய்யும் மைனர் தங்கவேல் கார்டியன் தகப்பன் பழனியப்பகவுண்டருக்கு நீங்கள் தெற்கே இருந்து வடக்கே அரணி பிடித்து PAP வாய்க்கால் தண்ணீர் கொண்டு செல்ல விட்டுவிட வேண்டியது " என்ற நிபந்தனைக்கு உட்பட.

<u>3வது அயிட்டம் :</u>

ஆனைமலை சார்பதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், ஒடையகுளம் கிராமம் புலத்தில் 2ம் அயிட்ட க.ச.501B2A1 நெ. காலை பூமியில் தெற்கே இருந்து வடக்கே தாவா 1வது அயிட்ட பூமி வரையில் அதாவது வேட்டைக்காரன்புதூர் கால்வாய் சரகம் 17/400 கி.மீட்டரில் பிரியும் பெரியபோது கிளை வாய்கால் எண்.1ன் மடை எண்.8–ல் கடைமடை தொட்டியின் நேர்கண் மூலம் 100 மீட்டர் நீளத்திற்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி க.ச.501/B1 நெ காலை வரை 3 அடி அகலத்தில் செல்லும் ஒற்றைக்கல் அரணி வாய்க்கால்.

தாவா வரைபடத்தில் சிவப்பு வண்ணத்தில் காட்டப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவு 2021ம் வருடம் டிசம்பர் மாதம் 09ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**
அ.வ.எண்.294/2020
இல்
இ.ம.எண்.01/2020
நாள்: 09.12.2021
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

-------------------------------